தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, MAY 20, 2024
திங்கட்கிழமை, மே 20, 2024 | ஒளி: 09 கதிர் 255 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் 5 அல்லது 12



**அரசியலமைப்புச் சட்டம் மற்றும் 1981ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி ஜனாதிபதித் தேர்தல்**

ஜனாதிபதி தேர்தலை ஒக்டோபர் 5 அல்லது 12 ஆம் திகதி நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஆலோசனைக்குப் பிறகே ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது என அறியமுடிகின்றது.

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் 1981ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16ஆம் திகதிக்கும் இடையே குடியரசுத் தலைவர் தேர்தலை நடத்த வேண்டும் என்று கடந்த வாரம் தேர்தல் ஆணைக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல் ஆணையம். மே. 9ஆம் திகதி அறிவித்திருந்தது. இந்நிலையிலேயே மேற்படி அறிவிப்பு வெளியானது.

தொடர்ச்சி P2

# மண்சரிவு அபாயம்



நாட்டில் உள்ள மாவட்டங்களில் 07 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை (20) அதிகாலை 3 மணி வரை அமுலுக்கு வரும் வகையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்..

இதன்படி, பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச செயலகங்களுக்கு 02 ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தில் உள்ள 04 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் 33 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் கட்டம் 1 இன் கீழ் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

# எலோன் மஸ்க்கை சந்தித்தார் ஜனாதிபதி



இந்தோனேசியாவில் நடைபெறும் 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வுடன் இணைந்து, இலங்கையில் Starlink சேவை வசதியை அமுல்படுத்துவது குறித்து ஆலோசிக்க, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், உலகப் புகழ்பெற்ற வர்த்தகரான எலோன் மஸ் (Elon Musk) க்கும் இடையிலான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

# ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் பிரதமருடன் சந்திப்பு



உலகளாவிய சமாதானத் தூதுவர், ஆன்மீகத் தலைவர், வாழும் கலை மன்றத்தின் நிறுவனர் குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சனிக்கிழமை (18) சந்தித்து விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

தொடர்ச்சி P2

# மஹா கும்பாபிஷேகம் ...



நுவரெலியாவில் வரலாற்றுச் சிறப்புமிக்க சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (19) சிறப்பாக நடைபெற்றது. சீதையம்மனின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவுக்காக அயோத்தி இராமர் கோயில் மற்றும் சீதை பிறந்த இடமான நேபாளம் ஆகிய இடங்களில் இருந்து சீதை அம்மனுக்கான சீர்வரிசை பொருட்கள் கொண்டுவரப்பட்டன. இந்தியாவின் உத்தராகண்டம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஊடாகப் பாயும் சரயு ஆற்றில் இருந்து 25 லீற்றர் புனிதநீர் கொண்டு வரப்பட்டது. அந்த புனித நீர், ஆலயத்தின் கலசத்தில் ஊற்றி சிறப்பு அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. (மேலதிக படங்கள் P3)

–செ.திவாகரன், ஆ.ரமேஷ்



# “கடைசி நேரத்திலேயே மக்கள் தீர்மானிப்பர்”



ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக முதலில் நடத்தப்படும் என்பதை அனுபவத்தில் அறிவேன் என்றும், எந்தக் கட்சிகளைச் சுற்றி மக்கள் திரண்டாலும், தேர்தலின் கடைசி நேரத்தில் நாட்டு மக்கள் தாம் விரும்பும் ஆட்சியாளரையும் ஜனாதிபதியையும் தீர்மானிப்பார்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பாட்டியின் கண்ணை பதம்பார்த்த சன்னம்

கம்பளை வெலம்பொட பிரதேசத்தில் நபர் ஒருவரால் குரங்குகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வெளியேறிய சன்னம் 72 வயதுடைய பெண்ணொருவர் கண்ணில் பட்டதில், அப்பெண் பலத்த காயமடைந்து கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலம்பொட பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பெண்ணின் பக்கத்தில் இருந்த அவரது 12 வயது பேத்தியும் துப்பாக்கிச் சூட்டில் சிறிய காயத்துக்கு உள்ளாகியுள்ளார்.

தொடர்ச்சி P2

# குடும்பத்தை கொன்று பணம், தங்கம் கொள்ளை

மாமா, தம்பி, சகோதரனை கொன்று பணம் மற்றும் தங்கத்தை கொள்ளையடித்த நபர் கைது செய்யப்பட்டதாக நல்லா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

# உ/த மாணவர்களுக்கு மற்றுமொரு புலமைப்பரிசில்

2022/2023 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து 2024/2025 உயர்தரப் பரீட்சைக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு 5000 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஜனாதிபதி நிதியம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# “சக்தியை விட்டு யாரும் வெளியேற மாட்டார்கள்”



**திகாம்பரம் எம்.பி தெரிவிப்பு: ரூ.1,700 குறித்தும் கேள்வி**

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 15, 20 பேர் வெளியேறுவார்கள் என்று சொன்னாலும், ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு யாரும் வெளியேற மாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்கிதியின் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்

தொடர்ச்சி P2

# மலையகத்திலும் வாழும் கலை அறக்கட்டளை

**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அறிவிப்பு**



ஆ.ரமேஷ்

இலங்கையில் மலையகத்தில், வாழும் கலை அறக்கட்டளை நிருவக செயற்பாடுகளை ஆரம்பிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த வேண்டுகோளுக்கு உதவுவேன்.

என ஆன்மீக குரு அமைதித் தலைவர், வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி, நுவரெலியாவில் (19) காலை இடம்பெற்ற விசேட சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை

# கனடா ஒருபோதும் நிறுத்தாது



**கனடா பிரதமர் அறிவிப்பு**

சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை கனடா ஒருபோதும் நிறுத்தாது என தெரிவித்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளிற்கு எதிராக தடைகளை விதித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

15 வருடங்களிற்கு முன்னர் இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்தது முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் உயிர்களை இழந்தனர். இன்றுவரை பலர் காணாமல்போயுள்ளனர் ,காயமடைந்துள்ளனர் மற்றும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இன்று நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் அர்த்தமற்ற நீண்டகால வன்முறை ஏற்படுத்திய வேதனை வலியுடன் வாழும் அவர்களின் அன்புக்குரியவர்களை நாங்கள் கௌரவிக்கின்றோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் மே 18ம் திகதியை தமிழர்கள் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிப்பதற்கான தீர்மானத்திற்கு கனடா பாராளுமன்றம் ஏகமனதாக வாக்களித்தது.

மோதல்களின் போது இடம்பெற்ற குற்றங்களிற்காகவும் இலங்கையின் அனைத்து மக்களும் எதிர்கொள்ளும் துயரங்களிற்காகவும் நாங்கள் எப்போதும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் பரப்புரை செய்கின்றோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் 5 அல்லது 12



நியமிக்கப்பட்ட நேரத்தில் வேட்புமனுக்கள் கோரப்படும் என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்புமனுக்கள் கோரப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அறிக்கை வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எலோன் மஸ்க்கை சந்தித்தார் ஜனாதிபதி



இதன்போது மேற்படி செயன்முறையில் இணைவதற்கான விண்ணப்ப செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. .

இந்தோனேசியாவிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்தோனேசிய கடல்சார் விவகாரங்கள் மற்றும் முதலீடுகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர் லுஹுத் பின்சார் பண்ட்ஜாய்டன் *Luhut Binsar Pandjaitan* ஆகியோருக்கு இடையிலும் ஞாயிற்றுக்கிழமை (19) சந்திப்பு நடைபெற்றது.

இருதரப்பு சந்திப்பில், *Global Blended Finance Alliance* அமைப்பின் நாடுகள், வெப்ப வலயத்திற்கான இலங்கையின் முன்னெடுப்பு (*Tropical Belt Initiative*), நீலப் பொருளாதாரம் (*Blue Economy*)கடற்பாசி தொழில் துறை, உலக தென்துருவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, சதுப்புநில பயிர்ச்செய்கை தொடர்பான ஆராய்ச்சி ஒத்துழைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க இருதரப்பு பணிக்குழுவை நிறுவுதல் மற்றும் இந்துச் சமுத்திர எல்லை நாடுகளில் (IORA) தற்போதைய தலைவராக இலங்கையின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் பிரதமருடன் சந்திப்பு



இளைஞர் யுவதிகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கையில் இலவச கல்வி நிலையங்களை நிறுவ தனது மன்றம் திட்டமிட்டுள்ளதாக குருதேவ் கூறினார்.

மேலும் ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவ விருப்பம் தெரிவித்தார். இந்த மன்றம் மட்டக்களப்பு மற்றும் வெல்லவாயவில் இரண்டு சிறுவர் இல்லங்களை நிறுவியுள்ளது.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, யதாமினி குணவர்தன, கலாநிதி என். ராமானுஜம், வினோத் முனசிங்க, மது ராவ் மற்றும் வாழும் கலை மன்றத்தின் முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பாட்டியின் கண்ணை பதம்பார்த்த சன்னம்

கம்பளை கீரப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண், தனது மகளின் வீட்டிற்குச் சென்று பேத்தியுடன் வீட்டுக்கு வெளியில் பொழுதை கழித்துக்கொண்டிருந்த போது இந்த விபத்துக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டுக்கு ஐம்பது மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வீட்டின் முன்பிருந்த பலா மரத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளதால், அருகில் வசிப்பவரை விசாரித்ததில் இதுபற்றி அறிந்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் மேல் தளத்தில் இருந்து பன்னிரெண்டு துவாரம் கொண்ட துப்பாக்கியால் அந்த நபர் சுட்டதால் விபத்து ஏற்பட்டுள்ளமை தெரியவந்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# உ/த மாணவர்களுக்கு மற்றுமொரு புலமைப்பரிசில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாத வருமானம் 100,000 ரூபாய்க்கு குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த, அரசாங்க பாடசாலைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடத்துடன் உயர்கல்வி கற்கும் மாணவர்கள், தாங்கள் படிக்கும் பள்ளியின் மூலம் மே 22 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் மற்றும் குறைந்தபட்சம் ஒவ்வொரு கல்வி வலயங்களிலிருந்தும் 50 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

# "கடைசி நேரத்திலேயே மக்கள் தீர்மானிப்பர்"

குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்யாவிடின் பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை செய்து முடிக்க முடியும் எனவும், ஏதாவது அபிவிருத்தி வேலைத்திட்டம் மீதமிருந்தால் அதனை நிறைவேற்ற முடியும் எனவும் சிறிசேன தேரர்களிடம் குறிப்பிட்டார்.

வரலாற்று சிறப்புமிக்க திம்புலாகல ஆரண்ய சேனாசனாவின் தலைவர் திம்புலாகல ராகுலலங்காரவிற்கு சனிக்கிழமை (18) விஜயம் செய்து நாட்டின் அரசியல் நிலவரங்கள் மற்றும் திம்புலாகல ஆரண்ய சேனாசனத்தின் தற்போதைய நிலவரங்கள் குறித்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கலந்துரையாடினார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மலையகத்திலும் வாழும் கலை அறக்கட்டளை



நுவரெலியா சீத்தா எலிய பிரதேசத்தில் அமைந்துள்ள சீதையம்மன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா ஞாயிற்றுக்கிழமை (19) காலை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்த மஹாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்து சிறப்பித்து ஆசி வழங்க இந்தியாவில் இருந்து ஆன்மீக குரு அமைதி தலைவர், வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் தாபகர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்குச் சனிக்கிழமை (18) வருகை தந்தார்.

இவ்வாறு வருகை தந்த ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி (19) நுவரெலியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டு சீத்தா எளிய அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்து ஆசியும் வழங்கினார்.

பின் நுவரெலியா "கிறேன்ட்" ஹோட்டலுக்குச் செய்த குருஜி அங்குஇலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நீர் வளங்கள் அமைச்சர் ஜீவன் தொண்டைமானின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்த சந்திப்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பி.இராஜதுறை,பாரத் அருள்சாமி உள்ளிட்ட இ.தொ.கா உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பில் விசேடமாக கலந்து கொண்டவர்கள், ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியிடம் இலங்கையில் மலையக மக்களின் நலத்திட்டத்திற்காக பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட குருஜி வாழும் கலை அறக்கட்டளை அமைப்பின் செயற்பாட்டை மலையகத்திலும் பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாகவும்,பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க இடங்கள் உள்ளிட்ட வசதிகளை எதிர் பார்ப்பதாகவும் இதற்கான உதவிகளை தனது அறக்கட்டளை நிறுவகம் ஊடாக வழங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஆன்மீக கற்கை நெறி பாடசாலைகள் ஆரம்பித்தல், வாழும் கலை பயிற்சிகள், பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்புகள்,உள்ளிட்ட பல்வேறு உதவிகளை தனது அறக்கட்டளை ஊடாக செய்து தருவதாகவும் குருஜி இதன் போது தெரிவித்தார்.

# "சக்தியை விட்டு யாரும் வெளியேற மாட்டார்கள்"

பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாட், இராதாகிருஷ்ணன் போன்றே தானும் சஜித் பிரேமதாசவுடனே இருக்கிறேன். தேர்தல் காலம் என்பதனால் பல்வேறு பொய்யான பிரசாரங்களைக் கண்டு ஏமாற வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில், ஞாயிற்றுக்கிழமை (19) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெறுவார். மக்கள் விடுதலை முன்னணி அல்லது தேசிய மக்கள் சக்தி சொல்லும் அளவுக்கு அவ்வாறு சவால் எதுவும் இல்லை. சிறுபான்மை கட்சிகள் அனைத்தும் சஜித் பிரேமதாசவுடனே உள்ளன. மே தினப் பேரணிகளில் எத்தனை பேர் கலந்து கொண்டனர் என்பதை வைத்து தேர்தல் முடிவுகளுக்கு வர முடியாது என்றார்.

மே தின கூட்டங்களுக்கு வருபவர்களை வைத்து தேர்தல் முடிவுகளை கணிப்பிட முடியாது. மே தினக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காத ஏராளமானோர் இருக்கின்றனர். எனவே, மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையை வைத்து தேர்தலில் வெற்றியாளரை தீர்மானிக்க முடியாது என பழனி திகாம்பரம் இங்கு தெரிவித்தார்.

"கோட்டாபய மற்றும் திருடர்கள் குழுவோடு இணையாது நாட்டை பொறுப்பேற்க நினைத்தார்" என்றே சஜித் பிரேமதாச நாட்டை பெறுப்பேற்க வில்லை என்று குற்றம் சாட்டுபவர்களுக்கு கூற வேண்டியுள்ளது. "ரணில் விக்கிரமசிங்க போன்ற திருடர்களை பாதுகாக்க விரும்பாததாலேயே" சஜித் பிரேமதாச நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. திருடர்களை இல்லாதொழிக்கவே சஜித் பிரேமதாச விரும்புகிறார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள்ச் சம்பளம் 1700 என ஜனாதிபதியும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் வர்த்தமானியில் வெளியிட்டிருந்த போதும், மறுநாள் கம்பனிகள் அவ்வாறு ஊதியத் தொகை கொடுக்க முடியாது என்று கூறியபோது, ஊதியத் தொகை தீர்மானித்த பிரகாரமே கொடுக்க வேண்டும் என்று ஊடகங்கள் மூலம் கூறியும், இதுவரை கொடுக்கப்படவில்லை. வாக்குகளைப் பெறுவதற்காகச் சொல்லப்பட்ட கதையே இதுவாகும். இது தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் செயலாகும் என்றார்.

இப்படியே போனால் இந்த தோட்ட மக்களுக்கு சரியான சம்பளமும் கிடைக்காது. பொருட்களின் விலைகள் அதிகரித்து, வாழ்க்கையை கொண்டு நடத்துவது சிரமமான காரியமாகி விட்டதால், இப்பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை மக்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களிடம் இருந்து கிலோ கணக்குக்கு கொழுந்துகளை எடுத்தால் அதிக இலாபம் ஈட்ட முடியும். இவ்வாறு மக்களை ஏமாத்தக் கூடாது. உரிய ஊதியத்தை வழங்க முடியாது என தோட்டக் கம்பனிகள் கூறுவதால், தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்காது போகிறது. வர்த்தமானி வெளியிடப்பட்டாலும், அந்த வர்த்தமானிக்கு கூட எவ்வித பெறுமதியும் கிடைக்கவில்லை என பழனி திகாம்பரம் இங்கு தெரிவித்தார்.

# கனடா ஒருபோதும் நிறுத்தாது



2023 இல் இலங்கையின் ஆயுதமோதலின் போது மனித உரிமைகளை மீறிய இலங்கை இராணுவ அதிகாரிகள் நால்வருக்கு எதிராக நாங்கள்;தடைகளை விதித்தோம். இலங்கையில் மனித உரிமைகளை கனடா வலுவான விதத்தில் பாதுகாக்க முயல்கின்றது.

2022 ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றும் நடவடிக்கைகளில் எங்கள் சர்வதேச சகாக்களுடன் இணைந்து ஈடுபட்டுள்ளோம்.இந்த தீர்மானம் இலங்கையில் அதிகளவான நல்லிணக்கம் நீதி பொறுப்புக்கூறல் மனித உரிமைகள் ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விடுக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தை மத நம்பிக்கை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கான சுதந்திரத்தை மதிக்குமாறு நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம்.இவை நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு அவசியமான விழுமியங்களாகும்.

இன்றைய நாள் மனித உரிமைகள் நீதி பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கு குரல்கொடுக்கும் ஆதரவளிக்கும் எங்களின் கூட்டு கடப்பாட்டை நினைவுபடுத்துகின்றது சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை கனடா ஒருபோதும் நிறுத்தாது என்றும் தெரிவித்துள்ளார்.

# குடும்பத்தை கொன்று பணம், தங்கம் கொள்ளை

மாலதெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இன்று(19) அதிகாலை நான்கு மணியளவில் இந்த மனிதாபிமானமற்ற கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிடுகின்றனர்.

மிதிவண்டியில் பயணித்த நபரை சோதனையிட்ட பொலிஸார், அவரிடம் இருந்து சுமார் 3 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் தங்கப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் சந்தேகநபரை கைது செய்து பொலிஸாருக்கு அழைத்துச் சென்றதாகவும், அவரிடம் இருந்த கடிதங்களை பரிசோதித்த போது, கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவரது மனைவியின் மாமா, புஞ்சி மற்றும் அவர்களது குழந்தையே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## மஹா கும்பாபிஷேகம்

நுவரெலியா சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம், ஞாயிற்றுக்கிழமை (19) வெகு விமர்சையாக நடைபெற்றது. (மலையக நிருபர்கள்)













### கொலை கலாசார நாயகர்களின்

# “முகமூடிகளை அகற்றவும்

■ வ.சக்தி

இந்த மண்ணிலே இருந்து கொண்டு பொலிஸாரை ஏவி விட்ட, கொலைக் கலாசாரத்தின் நாயகர்களாக அரசியல் செய்கின்றவர்களின் முகமூடிகள் அகற்றப்படல் வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அருட் தந்தை கந்தைய ஜெகதாஸ் அடிகளார் கேட்டுக்கொண்டார்.

இவ்விடயம் தொடர்பில் கிழக்கு ஊடக மன்றத்தில் இடம்பெற்ற ஊடகவியலார் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு முன்னிட்டு கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் இடத்திற்கு சென்ற பொலிஸார், பொலிஸார் போன்றோ அல்லது சாதாரண மக்களைப் போன்றோ நடந்து கொள்ளாமல் ஒரு ரவுடிக் கும்பலைப் போன்று செயற்பட்டுள்ளார்கள். அப்போது மாணவர்கள் ஒழுங்கு செய்திருந்த அஞ்சலி நிகழ்வை மிகவும் கீழ்த்தரமான முறையில் பொலிஸார் அகற்றியிருக்கின்றார்கள்.

கஞ்சிப்பானையை காலால் தட்டி



வீழ்த்தி, அடுப்பினுள்ளே நீர் ஊற்றி மிகவும் சிறுமைத்தனமாக முறையில், காவல் துறை எனப்படுகின்ற ஸ்ரீ லங்கா அரசின் ஏவல் துறை ஒரு ரவுடிக் கும்பலைப்போல் ஓர் அடியாட்களைப்போல் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்பட்டிருக்கின்றார்கள் என்றார்.

பொலிஸார் நடாத்திய இந்த அராஜகத்தையும், அக்கிரமத்தையும் கிழக்கு சிவில் சமூகத்தின் சார்பில் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். வடக்கு, கிழக்கு தழுவிய நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு தின நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்ற இச்சூழலிலே, நினைவேந்தல்களைச் செய்வதற்கு எந்த தடையும் இல்லை என நாட்டின் ஜனாதிபதி சொல்லியிருக்கும் இவ்வேளையிலே, மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்ற மிகவும் கேவலமான வேலையை பொலிஸார் செய்திருக்கின்றார்கள்.

மட்டக்களப்பிலே இது நடப்பதற்குரிய காரணம் என்ன இதன் பின்னணியிலே எந்த சூத்திரதாரிகள் இருக்கிறார்கள்? ஏனெனில் முள்ளிவாய்க்காலிலே நாங்கள் பல லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி நினைவேந்தலைச் செய்கின்றபோது அங்கு யாரும் வரவும் இல்லை தடுக்கவும் இல்லை. மட்டக்களப்பிலே நாங்கள் கஞ்சி காய“ச்சி பரிமாறியபோது பொலிஸார் எம்மை அச்சுறுத்தினார்கள், அதன் உச்சமாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடந்துள்ளது. இதன் பின்னணியிலே இருப்பவர்கள் யார்?

மட்டக்களப்பிலே இருக்கின்ற முன்னர் கொலையாளிகளாக இருந்து தற்போது வெள்ளையடிக்கப்பட்டு இருக்கின்றவர்களா? இதன் சூத்திரதாரிகளாக இருக்கின்றார்கள்? எனவே, குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸாருக்கும் அந்த பொலிஸ் அதிகாரிக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த செய்தியை சர்வதேசத்திற்குச் சொல்கின்றோம் என்றார்.

# கால்நடை போலி வைத்தியர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கால்நடை வைத்தியராக நடித்து நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்து வந்த நபரொருவர் திம்புள்ள-பத்தனை பொலிஸ் அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் சனிக்கிழமை (18) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டகலை பிரதேசத்தில் உள்ள கால்நடை பண்ணை ஒன்றில் நோயுற்ற பசுவிற்கு சிகிச்சை அளிப்பதாக தலவாக்கலை பிரதேசத்திற்கு பொறுப்பான அரச கால்நடை வைத்தியர் ஏ.ஏ.சுரேஷ் குமாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், திம்புள்ள-பத்தனை ஸ்தலத்துக்குச் சென்று, போலி வைத்தியரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்த மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் பலவற்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்குரிய 58



வயதுடைய போலி கால்நடை வைத்தியர் ஹட்டன்-கொட்டகலை பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் ஹட்டன் மற்றும் நுவரெலியா பொலிஸ் பிரிவில் கால்நடை பண்ணைகளை நடத்தி வருபவர்களிடம் சென்று நோயுற்ற கால்நடைகளுக்கு பணம் பெற்று சிகிச்சை அளித்துள்ளார் தலவாக்கலை பிரதேசத்திற்குப் பொறுப்பான அரச கால்நடை வைத்தியர் ஏ.ஏ.சுரேஷ் குமார், தெரிவித்தார். அவர், சிகிச்சையளித்த கால்நடைகளில் பல உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சந்தேகநபரை கைது செய்ய சென்ற போது சந்தேகநபர் தப்பி ஓடியதாகவும், பொலிஸார் சந்தேக நபரை துரத்திச் சென்று பிடித்த போதும் சந்தேக நபர் தப்பிச் செல்லும் போது கீழே விழுந்ததால் காயங்களுக்கு உள்ளானதால் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திம்புள்ள- பத்தனை பொலிஸ் பரிசோதகர் ஆனந்தசிறி தெரிவித்தார்.

சந்தேக நபர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய பின்னர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

### “30 வயதுக்குட்பட்ட 30 ஆசியர் ”

# பட்டியலில் தினாரா



ஃபோர்ப்ஸ்சஞ்சிகையால்வெளியிடப்பட்ட “30 வயதிற்குட்பட்ட 30 ஆசியர் ”பட்டியலில் இலங்கை நடிகையும்திரைப்படதயாரிப்பாளருமானதினராபுஞ்சிஹேவாஇடம்பிடித்துள்ளார்..

பொழுதுபோக்குமற்றும்விளையாட்டுத்துறையில்பல்வேறுதுறைகளில்இளம்தலைவர்களாகஅடையாளம்காணப்பட்ட 30 பேர்தொடர்பானபட்டியலை .ஃபோர்ப்ஸ் சஞ்சிகைவெளியிட்டுள்ளது.

10 பிரிவுகளின்கீழ்பட்டியலுக்குநபர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், பொழுதுபோக்குமற்றும்விளையாட்டுப்பிரிவில்இருந்துதினராபுஞ்சிஹேவாபட்டியலில்சேர்க்கப்பட்டுள்ளார்.

தினரா 2018 இல்தனதுசொந்ததிரைப்படமான “மாலா” மூலம்திரையுலகில்நுழைந்தார். இப்படம் சர்வதேசதிரைப்படவிழாவில்திரையிடப்பட்டதால்காடிபடத்திலும்நடிக்கவாய்ப்பு கிடைத்தது.

லண்டனின்குயின்மேரிபல்கலைக்கழகத்தின்பட்டதாரியானதினராபுஞ்சிஹேவா, குறைந்தவருமானம்கொண்டகுடும்பங்களைச்சேர்ந்தகுழந்தைகளுக்குநாடகம்மற்றும்நடிப்பைஅறிமுகப்படுத்துவதற்காகஅர்ப்பணிக்கப்பட்டஇலாபநோக்கற்றநிறுவன மானpunchi Actors இன்நிறுவனர்ஆவார்.

# மு.கா புனரமைப்பு

■ நூருல் ஹுதா உமர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை 05, 06, 07ம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான கிளை புனரமைப்புக் கூட்டம் தொழிலதிபர் பீ.ரீ.அப்துல் மஜீத் (கபீர்) தலைமையில் சனிக்கிழமை (18) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.



உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ. சமால்டீன், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஏ.கலீலுர் ரஹ்மான், மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# பால் சுரக்கும் வேம்பு மரம்



■ வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்றில் உள்ள 241ஆம் படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தின் சிற்றுண்டிச்சாலையின் முன்னாள் இருக்கும் வேம்பு மரத்திலிருந்து கடந்த ஒரு வாரகாலமாக பால்போன்ற திரவம் வழிந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஆரம்பத்தில் சாதாரணமாக வெளியேற தொடங்கிய பால்போன்ற பதார்த்தம் தொடர்ந்தும் வழிந்து வருவதுடன் போத்தல்களில் சேமிக்கும் அளவிற்கும் வெளியேறி வருவதை காண முடிகின்றது.

சில காலங்களில் சில வேம்பு மரங்களிலிருந்து இது போன்ற பால் வெளியேறும் சம்பவங்கள் நடைபெற்றாலும் கூட கண்ணகி அம்மனின் ஆலயங்கள் திறக்கப்பட்டு திருக்குளிர்த்தி உற்வசங்கள் நடைபெற்றுவரும் இக்காலத்தில் இவ்வாறு பால்போன்ற திரவம் வழிந்து வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் தற்போது இதனை பலரும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

குறித்த வேப்ப மரத்திலிருந்து வெளியேறும் பால்போன்ற திரவம் இனிப்பாக உள்ளமையும் அப்பிரதேசத்தில் ஒரு வகை வாசம் வீசி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கொத்துடுவயில் ஈரநில பூங்கா

கொத்தடுவ புதிய ஈரநில பூங்கா அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட ஈரநிலங்களின் அபிவிருத்தியின் கீழ், கொத்தடுவ ஈரநிலத்தை அபிவிருத்தி செய்வதில் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது தியசரு, பெத்தகான, கொட்டுபெம்ம ஆகிய நகர ஈர நிலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலின் சமநிலையைப் பேணுதல், பரபரப்பான நகரத்தில் பொதுமக்களின் மனநலத்தைப் பேணுதல் தடுத்து நிறுத்துதல், வெள்ளப் பெருக்கு நேரங்களில் நீரை சேர்த்து வைத்துக் கொள்வதற்கு போன்ற செயல்களை அடையாளம் கண்டு ஈரநிலங்களை பலவந்தமாக பிடித்துக் கொள்வதைத் தடுத்து கொத்தட்டுவ ஈரநிலப் பூங்கா உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பலவந்தமாக ஈரநிலங்களில்



கட்டடங்களை கட்டுவதன் காரணமாக “பெரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள நீரேந்து பகுதிகளாக அரசு கையகப்படுத்தியுள்ள தாழ் நிலங்கள்” நாளாந்தம் குறைந்து கொண்டு வருகின்றது. அவற்றைப் பாதுகாத்து ஈரநிலங்களை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றின் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்துவது என்ற இலக்கின் கீழ் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. திட்டத்திற்காக 180 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருட முடிவின் போது பூங்காவின் வேலைகளை முடிக்க திட்டமிட்டுள்ளோம்.

ஈர நில ஆக்கிரமிப்பு தடுப்பு திட்டம் ஏற்கனவே 77.85% முன்னேற்றம் அடைந்துள்ளது. கொழும்பு நகரின் நீரின் தரத்தை மேம்படுத்தும் திட்டம் 22.08% முன்னேற்றத்தை எட்டியுள்ளதாகவும் களுஓயா மழை நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் திட்டம் ஏற்கெனவே 40% முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# நீதிக்காக ஏங்கியிருக்கும் முள்ளிவாய்க்காலும் ரத்துபஸ்வலவும்

சம்பவமொன்று இடம்பெறுமாயின் அங்கு பாதிக்கப்பட்ட தரப்பும், பாதிப்புக்கு காரணமானவர்கள், உத்தரவை பிறப்பிடத்தவர்கள் என்றொரு தரப்பும் இருக்கத்தான் செய்யும். எனினும். நமது நாட்டை பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட தரப்பு மட்டுமே இருக்கின்றதாக தெரிகின்றது.

இறுதியுத்தம் நிறைவடைந்து, மே.18 சனிக்கிழமையுடன் 15 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. அந்த யுத்தத்தில், வகைதொகையின்றி அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பலரும் காயமடைந்தனர்.

அரசாங்க படையினர் கண்முன்னே ஒப்படைக்கப்பட்ட தங்களுடைய உறவினர்களை இன்னும் தேடிக்கொண்டுதான் இருக்கின்றனர். அவ்வாறானவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள பல்வேறான ஆணைக்குழுக்களை நிறுவிய அரசாங்கங்கள், அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டுள்ளன. எனினும், பாதிக்கப்பட்டவர்கள் எவ்விதமான நீதி, நியாயம் கிடைக்கவில்லை.

நீதிமன்றங்களுக்குச் செல்லும் வழக்குகளின் தீர்ப்புகளில் திருப்திகொள்ளாத பாதிக்கப்பட்ட தரப்பினர், அதற்கெதிராக மேன்முறையீடுகளைச் செய்து, நியாயங்களை பெற்றுக்கொள்கின்றனர். முள்ளிவாய்க்கால் விவகாரத்தை பொறுத்தவரையில், சர்வதேச விசாரணையே கோரப்பட்டுள்ளது. எனினும், சாக்குபோக்கான பதில்களைச் சொல்லி அரசாங்கங்கள் தப்பித்துக்கொள்கின்றன.

நீதிமன்றங்களால், மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் பலர், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் மன்னிப்பளிக்கப்பட்ட சம்பவங்களும் ஏராளம். அதில், ஒருசிலர், வெளிநாடுகளுக்கு பறந்துவிடுகின்றனர். மீதமிருக்கும் சிலருக்கு எதிராக, தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் பிரகாரம், மீளவும் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். அதாவது, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பும் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில்தான், சுத்தமான குடிநீரைக்கேட்டு, வீதிக்கு இறங்கிய மக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பிலான ரத்துபஸ்வல விவகார தீர்ப்பு, வெள்ளிக்கிழமை (17) வழங்கப்பட்டுள்ளது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நான்கு இராணுவ வீரர்களையும் விடுதலை செய்யுமாறு கம்பஹா மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

கம்பஹா, ரத்துபஸ்வல தனியார் தொழிற்சாலையொன்றின் கழிவுநீரால் குடிநீர் மாசடைந்துள்ளதாகக் கூறி, 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 01ஆம் திகதி வெலிவேரிய நகரில் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அதனைக் கலைக்க இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை மாணவர்கள் இருவரும் மற்றுமொருவரும் கொல்லப்பட்டதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பிரிகேடியர் அருண தேசப்பிரிய குணவர்தன (அப்போது மேஜர்), சார்ஜன்ட் அருணகே சிறிசேன, கோப்ரல் ஜே.எம். திலகரட்ன மற்றும் கோப்ரல் லலித் கிரே ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் கம்பஹா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

நீதிபதிகளான நிமல் ரணவீர, சஹான் மாபா பண்டார மற்றும் ரஷ்மி சிங்கப்புலி ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்ற அமரவு கிட்டத்தட்ட 242 பக்கங்கள் கொண்ட முழுத் தீர்ப்பையும் 4 மணி நேரத்தில் வாசித்து தீர்ப்பை வழங்கியது. இந்த வழக்கு 11 ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கு முள்ளிவாய்க்கால் மக்கள் மட்டுமன்றி, ரத்துபஸ்வல மக்களும் நீதிக்காக ஏங்கிநிற்கின்றனர் என்பதே உண்மை.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

## எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# தேர்தலில் தமிழர்களின் நிலைப்பாடு

லக்ஸ்மன்

மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்களின் கைகளில் அதிகாரத்தைக் கொடுங்கள் என்று பல தடவைகளில் தமிழ் அரசியல் வாதிகள் கோரிக்கைகளை விடுத்திருக்கின்றனர். கடந்த வருடத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நாடகம் ஒன்று வேட்புமனு வரையில் அரங்கேற்றப்பட்டு இடை நடுவில் கைவிடப்பட்டது.

இந்நிலையில்தான் மற்றும் ஒரு தேர்தல் அல்லது இரண்டு தேர்தல்கள் இவ்வருடத்தில் நடைபெற்றாகவேண்டும் என்ற பேச்சுக்களும் கதைகளும் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

வடமாகாண சபை கலைக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்து விட்டன. கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு 6 வருடங்கள் கடந்து விட்டன. தற்போது மாகாண சபைகளில் ஆளுனர்களின் அதிகாரமே இருக்கின்றது. நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைத் தேர்தலை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பு நடத்தி அந்த மக்களின் கைகளில் அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களுடைய கோரிக்கையாகும்.

பெரும் எதிர்பார்ப்புக்களுடன் உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்த போதிலும் அத் தேர்தல் நடைபெறுமா? என்பது இன்னமும் தெரியாமலேயே இருந்து வருகிறது. எதிர்க்கட்சியினர் இணைந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டால் நீதிமன்றத்துக்குச் செல்வோம் என்று ஒன்றுகூடி பொது அறிக்கை ஒன்றைக் கூட வெளியிட்டிருக்கிறார்கள். இருந்தாலும் இதுவரை அதற்குப் பயனில்லை.

மக்களிடம் அதிகாரத்தினை கொடுப்பதில் ஏன் இந்த இழுத்தடிப்பென்பது புரியாத புதிராகவே இருக்கிறது. ஆனாலும் அந்தத் தேர்தலை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு ஜனாதிபதித் தேர்தல்தான் நடைபெறவிருக்கின்றது. என்பதை வெளியாகும் அறிவிப்புகளின் ஊடாக யூகித்துக்கொள்ள முடிகின்றது.

ஆனால், 69 இலட்சம் வாக்குகளை அள்ளிக் கொண்ட ஜனாதிபதியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் தம்மை ஆதரித்த மக்களால் அடித்துத் துரத்தும் அளவுக்கு, தமது பதவிகளைத் தாமே இராஜினாமா செய்யவேண்டிய சூழலுக்கு நாட்டின் நிலைமை சென்றது. இதற்குக் காரணம் என்ன எங்கு தவறு நடந்தது, தவறைத்திருத்த என்னவெல்லாம் செய்யலாம் என்பதனைப்பற்றி எந்தவொரு சிந்தனையும் இல்லாமல் அடுத்த பாராளுமன்றத்துக்கான தேர்தலை நடத்துவதனைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முயன்று வருகிறது. "கோட்டா கோ கம" என்கிற அரகலய போராட்டத்தில் பட்டும் படாமலேயே இருந்த தமிழர்களை முற்று முழுதான காரணமாகக் காட்டி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தான் எழுதிய புத்தகத்தில் எழுதியிருந்தார்.

> **ஓர் அரசாங்கம் தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் எதிர்க்கட்சி அதனை நாடு தழுவிய போராட்டமாக மாற்றும் கைங்கரியம் இலங்கையில் இருந்துவருகிறது**

சுதந்திரத்தின் பின்னர் 75 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அப்போதே ஆரம்பித்த தமிழ் மக்களினுடைய உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு எந்தவோர் அரசாங்கமும் இதயசுத்தியுடன் முடிவெடுக்கவில்லை. முயலவுமில்லை.

ஒரு வார முள்ளிவாய்க்கால் நினைவுகள், ஞாயிற்றுக்கிழமையுடன் (19) நிறைவடைந்தது. யுத்தத்தின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கொல்லப்பட்ட தம் உறவுகளுக்காக அஞ்சலி செலுத்துவதற்கும் அவர்கள் இறுதி நாட்களில் அருந்திய கஞ்சியைப் பகிர்வதற்கும் தமிழ் மக்கள் தடுக்கப்பட்டார்கள். நல்லிணக்கம், இன ஒற்றுமை, நிலைமாறு கால நீதி போன்ற பல விடயங்கள் பற்றி பேசும் செயற்படுவதாக சொல்லும் அரசாங்கம் தமிழ் மக்களின் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தினைக்கூட விட்டுவைப்பதற்குத் தயாராக இல்லை என்பதனையே இவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தவறு எங்கே நடக்கிறது, தவறு எங்கே நடந்தது. நாம் தவறிய இடம் எது? என்பதை இன்னம் உணராதவர்களாக பெரும்பான்மையினர் இருந்து கொண்டிருப்பது. இலங்கை நாட்டில் இனமுறுகலையே மென்மேலும் தோற்றுவிக்கும். யுத்த காலத்தினைவிடவும் மோசமான நடைமுறைகளை யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்களாகியும் கடைப்பிடிக்க முனைவது ஏன்? என்பதுவே இந்த இடத்தில் கேள்வியாக இருக்கிறது.

நாட்டில், அடிப்படை உரிமைகளுக்கு முரணாக பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளது. ஆறு மாதங்களுக்கு மாத்திரமெனக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் 45 வருடங்களாகத் தொடர்கிறது. வடக்கு, கிழக்கு தமிழர்களுக்காக கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் முஸ்லிம்களைத் அண்மையில் தொட்டது.

இன்று சிங்கள இளைஞர்களின் மீது பாய்கின்றது. இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் தேவையா? என்று கேள்வி எழுப்பப்பட்டாலும், அதனைவிடவும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினைக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மே மாதம் என்பது இலங்கையில் வெசாக் கொண்டாட்டத்துக்குரிய மாதம் அந்த மாதத்திலேயே இப்போது முள்ளிவாய்க்கால் வாரமும் கடந்த 15 வருடங்களாக இணைந்து கொண்டிருக்கிறது.

ஒரு சிறுதொகை தமிழ் மக்கள் தங்களது உறுவுகளை நினைவுகூருவதற்காக ஒன்றுகூடுவது சட்டங்களுக்குப் பொறுக்காத விடயமாக இருக்கின்றது. அவ்வாறானால் வெசாக் கொண்டாட்டங்கள் எவ்வாறு சட்டங்களுக்கு உட்படுகின்றன. என்பது இந்த இடத்தல் கேள்வியாகவே இருக்கிறது. பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு விடுக்கப்பட்ட தடைகளை, அச்சுறுத்தல்களை ஜனாதிபதியினால் நிறுத்தமுடியவில்லை.

கிழக்கில் பாற் பண்ணையாளர்களின் பண்ணை வளர்ப்புப் பிரதேசங்களான மயிலத்தமடு, மாதவணை, கந்தர்மல்லிச்சேனை போன்ற பிரதேசத்தை சிங்களக் குடியேற்றமாக மாற்ற முன்னாள் ஆளுநர் முயற்சித்தார். இப்போதும் அப்பிரதேசத்தில் தொடர்ச்சியான பிரச்சினை தொடர்ந்த வண்ணமிருக்கிறது.

அதனை ஜனாதிபதியினால் முடித்து வைக்கமுடியவில்லை. அல்லது அவருக்கு மனமில்லை. அதே நேரத்தில் வடக்கில் வெடுக்குநாரி போன்ற பிரதேசங்களிலும் அராஜங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலா, பாராளுமன்றத் தேர்தலா என்பது விடயமல்ல. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் முக்கியமானது அந்த நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல் என்பது மக்கள் ஆணை ஊடாகவே நடைபெறவேண்டும். மக்கள் தமது ஆணையை வழங்குவதற்காக உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் எனக் கூக்குரலிட்டுவரும் எதிர்க்கட்சிகள் கூட இந்த விடயங்களுக்கு சரியாகக் குரல்கொடுப்பதாகத் தெரியவில்லை. அப்படடியானால், அவர்களின் நோக்கமென்ன?

கலைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இன்னும் நடத்தப்படவில்லை. நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வல்லாவிடினும் முதற்புள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட மாகாண சபை ஜனநாயக அடிப்படையில் இயங்க முடியாது ஆளுக்காள் சட்டக்காரணங்களைக் கூறி தள்ளிப் போடப்பட்டு வருகிறது. உண்மையில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என கோஷமெழுப்பும் ஜனநாயக் கனவான்கள் குரலெழுப்பவேண்டியது மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்காகவேயாகும்.

தமிழர்கள் சமஸ்டி பற்றிய எண்ணக்கருவை எடுக்க முன்னர் சமஸ்டி பற்றிய எண்ணக்கருவை எடுத்துரைத்தவர் எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க. 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் போதாது என்று கூறிக்கொண்டிருக்கையில் 13 பிளஸ் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் முன்னிலையில் எடுத்துரைத்தவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இவர்தான் ஈழம் தவிர எல்லாம் தருவேன் என்று தன் சிங்களத் தமிழில் எடுத்துரைத்தவரும்கூட. ஆனால், இதுவரை எதுவுமே நடந்ததில்லை. நடைபெறும் என்ற நம்பிக்கையும் தமிழ் மக்களிடம் இல்லாமல் போய்விட்டது.

ஓர் அரசாங்கம் தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் எதிர்க்கட்சி அதனை நாடு தழுவிய போராட்டமாக மாற்றும் கைங்கரியம் இலங்கையில் இருந்துவருகிறது. குறிப்பாக. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கொண்டுவந்த பிராந்தியங்களின் கூட்டமைப்பு என்ற அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை கொண்டுவந்தவேளை பாராளுமன்றத்தில் வைத்து தீக்கரையாக்கப்பட்டதனைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில்தான் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தலாக இருந்தாலும், இனப்பிரச்சினைக்கான அடிப்படைச் சிக்கல்களை தீர்த்துவைப்பதற்கானதாக இருத்தல் வேண்டும். தற்போது தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடுகூட தமிழர்களது அடிப்படைப்பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொண்டுவருவதற்கான ஒருபடி முயற்சியேயாகும்.

எது எவ்வாறானாலும், பாராளுமன்றமோ, ஜனாதிபதித் தேர்தலோ, எந்தத் தேர்தலாக இருந்தாலும் தமிழர்கள் நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை நோக்கிய நகர்வுக்காகவே இருக்கவேண்டும் என்பதில் மாற்றுக் கருதில்லை. பயனற்றுப் போகும் முயற்சிகளை நடத்துவதில் ஈடுபடுவதனைவிடவும் சிறிதேனும் பயன்விளையும் வழிகளைக் கண்டறிவதும் தமிழர்களுக்கு முக்கியமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கையுடன் நாமே தேடும் ஆதாயங்கள் உண்மை வழியில், நேர்மையாக இருக்க வேண்டும். ஒரு வர்த்தகர் நம்பிக்கையுடன் ஒரு தொழிலைத் தொடங்கினால் அது நிலையாக இருக்க நேர்மை, நாணயம் மிக அவசியம்.

எந்தத் தொழிலிலும் எல்லோரும் உயர் நிலைக்கு வரமுடியும். ஆனால், மக்கள் நலன்பற்றியும் கவனமெடுக்கவேண்டும்.

நீங்கள் சரியாக நடந்தால் உங்களை நோக்கி ஒரு பெருங்கூட்டமே இணைந்து வரும். லாபம் என்பது வெறும் பணம் அல்ல. மக்களை நேசிப்பதால் வரும். அன்பினால் கிடைத்த வரவுகளாகும்.

இணைந்த மக்கள் பலமே, வையகத்தின் செழிப்புமாகும். பிறரைத் தூக்கிவிடாதவனும், தன்னை மட்டும் கவனிப்பவனும், எவரது விளர்ச்சியைத் தடுப்பவனும் உலகத்தால் வீசியெறியப்படுகின்றான்.

உலகம் ஒரு பெரிய வீடு ஒவ்வொரு நாடுகளும் அதன் அறைகள் என்பதை சகல அரசுகளும் உணவேண்டும். எமக்கே எல்லாம் எநன எந்த வல்லரசும் பேராசை கொண்டால். என்ன நடக்கும். என்பதைக் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும் இந்த உலகை இயக்குகின்றான். எனவே, எமக்கானதே இந்த புவனம் உணர்க.

– பருத்தியூர் பால– வைரவநாதன்

## கடிதங்கள்

### குப்பைகள்வீசுவதால்அசௌகரியம்



அராலி யாழ்ப்பாணம் வீதியில் நாவாந்துறைக்கு அண்மித்த பொம்மைவெளி, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வீதியோரங்களில் கழிவுப் பொருட்களை மக்கள் வீசிவிட்டுச் செல்வதனால் அங்குத் துர்நாற்றம் வீசுவதுடன் குறித்த பகுதிகள் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் ஏராளமான கழிவுப் பொருட்களும் கொட்டப்பட்டுள்ளன. இருப்பினும் யாழ்ப்பாண மாநகரசபையோ அல்லது சுகாதார பரிசோதகர்களோ அந்த இடத்தினை சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லையெனக் குறித்த பகுதிமக்கள்தெரிவிக்கின்றனர்.

அண்மைய நாட்களாக மழையுடனான காலநிலை காணப்படுவதால் அங்கு இருக்கின்ற கொள்கலன்களிலும், பொலுத்தீன் பைகளிலும் நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் காணப்படுகிறது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இதனைப் பார்த்தும் பார்க்காதது போல் செல்கின்றனர்.

இந்த பகுதிகளைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனஅப்பகுதிமக்கள் கோரிக்கையாக விடுத்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

– பு.கஜிந்தன்

‘மிகவும் விரும்பப்படும் வங்கி;’

# வர்த்தக நாமமாக கொமர்ஷல் வங்கி தெரிவு




முன்னணி வர்த்தக சஞ்சிகையான LMD ஆல் 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் ‘மிகவும் விரும்பப்படும் வங்கி’ வர்த்தக நாமமாகவும், ஒட்டுமொத்தமாக நாட்டில் சேவைத்துறையில் இரண்டாவதாக ‘அதிகம் விரும்பப்படும்’ வர்த்தக நாமமாகவும் கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு விருதுகள் LMD இன் ஆய்வு பங்காளரான PepperCube ஆலோசகர்களின் இணையத்தள மதிப்பாய்வின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை.

மேல், தென், மத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களைச் சேர்ந்த LMD யின் வாசகர்கள் இந்த மதிப்பாய்வு கணக்கெடுப்பில் பங்கேற்றதுடன் மற்றும் மிகவும் விரும்பப்படும் வர்த்தக நாமங்கள் 34 பிரிவுகளின் கீழ் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த பெறுமதிமிக்க பொதுமக்களின் அங்கீகாரம் குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் சில்லறை வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க, ‘மக்களின் உணர்வை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய விருதுகளை பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் மேற்கொள்ளும் அனைத்து விடயங்களும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை மிஞ்சும் வகையில் உள்ளதுடன் அனைத்து பங்குதாரர் குழுக்களுக்கும் எங்கள் கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்துடன் அமைந்துள்ளன. இந்த தரவரிசையானது, ஒவ்வொரு கொமர்ஷல் வங்கி ஊழியருக்கும் ஊக்கமளிக்கும் ஒரு சிறந்த ஆதாரமாகவும், நாங்கள் சரியாக செயற்பாடுகளை மேற்கொள்கிறோம் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது’ எனக் கூறினார்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், கொமர்ஷல் வங்கியானது, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (SLIM) - Kantar Peoples விருதுகளில், ‘ஆண்டின் சிறந்த மக்கள் தனியார் வங்கியாக’ தெரிவு செய்யப்பட்டதுடன், UK இன் குளோபல் ஃபினான்ஸினால் இலங்கையின் சிறந்த வங்கி மற்றும் இலங்கையின் சிறந்த SME வங்கி உட்பட பல சர்வதேச மற்றும் உள்நாட்டு விருதுகளைப் பெற்றுள்ளது.

‘சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருது 2023’

# SLT-MOBITEL நிறுவனத்துக்கு கிடைத்தது




நிலைபேறான வியாபார செயற்பாடுகளுக்கான சிறந்த அர்ப்பணிப்பை கௌரவிக்கும் வகையில், ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சிக்கு (SLT) அண்மையில் நடைபெற்ற “சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருது 2023” இல் “ஏனைய” பிரிவில் உயர்ந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. 33 நிறுவனங்களுடன் SLT போட்டியிட்டு, கடுமையான மதிப்பீட்டு செயன்முறையை தொடர்ந்து இந்த உயர் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முன்னணி வர்த்தக சம்மேளனமான, இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் இந்த வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, பல்வேறு துறைகளில் நிலைபேறாண்மைக்கு தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் நிறுவனங்களை கௌரவிக்கின்றது.

SLT-MOBITEL இன் கூட்டாண்மை மூலோபாயத்தில் நிலைபேறாண்மை என்பது எப்போதும் முக்கிய அரணாக அமைந்துள்ளது. இந்த கௌரவிப்பினூடாக, இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக்கு SLT-MOBITEL இனால் வழங்கப்படும் பங்களிப்பு மீள உறுதி செய்யப்பட்டுள்ளது. புத்தாக்கமான தீர்வுகள் மற்றும் சேவைகளினூடாக, பங்காளர்களுக்கு நீண்ட கால அடிப்படையிலான பெறுமதியை ஏற்படுத்தி, பொறுப்பு வாய்ந்த வகையில் வியாபார நடத்தையை கொண்டு, சமூகங்களை மேம்படுத்துவது, ஒழுக்கமான ஆளுகை மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தல் போன்றவற்றில் SLT-MOBITEL காண்பிக்கும் அர்ப்பணிப்பு இந்த விருதினூடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) அம்சங்களில் பரிபூரண நிலைபேறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ள நிறுவனங்களை கொண்டாடும் வகையில் “சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருது” அமைந்துள்ளது.

வர்த்தக சம்மேளனத்தினால், சூழல் வழிநடத்தல், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூக உறவுகள், கூட்டாண்மை ஆளுகை, நிதிச் செயற்பாடுகள், பொருளாதார பங்களிப்புகள் மற்றும் விசேட நிலைபேறாண்மை அபிவிருத்தித் திட்டங்கள் போன்றன அடங்கலாக கடுமையான மதிப்பீடுகளுக்கு நிறுவனங்களை உட்படுத்தப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளைக் கொண்ட நடுவர் குழுவினருடன் நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

SLT-MOBITEL இன் சிரேஷ்ட தலைமைத்துவ அணியினரான ஜனக அபேசிங்க (பிரதம நிறைவேற்று அதிகாரி), பிரபாத் தஹநாயக்க (பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி), கலாநிதி. சந்தன விஜயநாம (பிரதம மக்கள் அதிகாரி), அனுருத்த சூரியாரச்சி (பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் சேவைகள்) மற்றும் இதர சில சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் முன்னணி டிஜிட்டல் சேவைகள் வழங்குநர் எனும் வகையில் SLT-MOBITEL, தொடர்ந்தும் கூட்டாண்மை நிலைபேறாண்மை தொடர்பில் முன்னேற்றகரமான பங்களிப்பை வழங்க எதிர்பார்ப்பதுடன், அதனூடாக தேசத்துக்கு சுபீட்சமான மற்றும் சூழலுக்கு நட்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் பங்களிப்புச் செய்யும்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்...

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல், வடக்கு, கிழக்கில், சனிக்கிழமை (18) முன்னெடுக்கப்பட்டது.

## காரைதீவில்...




காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சனிக்கிழமை (18) நடாத்தப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் இந் நினைவேந்தல் நிகழ்த்தப்பட்டது. நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான க.சிவலிங்கம், பொ.செல்வநாயகம், திருமதி சுமித்ரா, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த. மோகனதாஸ், ஆலய தர்மகர்த்தா த.சிவகுமார் ,சமூக செயற்பாட்டாளர் விநாயகம் விமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். உறவுகளை நினைவு கூர்ந்து சுடரேற்றி அகவணக்கம் செய்யப்பட்டது.

( வி.ரி.சகாதேவராஜா)







## கல்லடியில்...



மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் கொட்டும் மழையில் மத்தியில் சனிக்கிழமை (18 மாலையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு, படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தலைமையில் அன்றையதினம் மாலையில் 5 மணிக்கு இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15 வது ஆண்டு நினைவேந்தல் கல்லடி கடற்கரையில் இடம்பெற்றது.
இதில் அரசியல்வாதிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மசாந்தி வேண்டி ஈகைச்சுடர் ஏற்றினர். மழைக்கு மத்தியிலும் மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

கனகராசா சரவணன்







## துணைவியில்...



இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையினால் பிரதான நினைவேந்தல் நிகழ்வுகள் வட்டுக்கோட்டை துணைவியில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வர பாதம் சரவணபவனின் தலைமையில் சனிக்கிழமை (18) மாலை 5 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.
இதன் பொழுது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்த உறவுகளை நினைவு கூறி பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் பொதுசுடரேற்றபட்டு மலர்மாலையும் அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து வட்டுக்கோட்டையின் பல பகுதிகளிலும் இருந்து கலந்து கொண்ட மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.
இதனையடுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியின் வரலாற்றினை உள்ளடக்கிய துண்டுபிரசுரமும் விநியோகிக்கபட்டது.

பு.கஜிந்தன்



## பட்டித்திடலில்...







தோப்பூர் – பட்டித்திடல் கற்பக விநாயகர் ஆலயத்தின் மூன்றலில் சனிக்கிழமை (18) மாலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.இதனை பட்டித்திடல் கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இதன் போது முள்ளிவாய்க்கால் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டதோடு முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அ . அச்சுதன்

## மன்னாரில்...





இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் இரங்கல் திருப்பலி தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் தேவாலயத்தில் சனிக்கிழமை (18) ஒப்புக் கொடுக்கப்பட்டது.
அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்காக விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதோடு,இறந்த உறவுகளுக்காக மலர் அஞ்சலியும் இடம் பெற்றது.
இரங்கல் திப்பலியைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி காய்ச்சப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.
இதன் போது தென் பகுதியில் இருந்து தலைமன்னாரபகுதிக்குச் சுற்றுலா வந்த பெரும்பான்மையின மக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்துத் தெளிவு படுத்த பட்ட நிலையில் அவர்களும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியைப் பெற்றுக்கொண்டனர்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இரங்கல் திருப்பலி மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வை ஆலய அருட்பணி பேரவை,மற்றும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

ரொசேரியன் லெம்பேட்



சிங்கப்பூர்

சிங்கப்பூரில் புதுவகை கொரோனா

# முகக்கவசம் அணிய அறிவுறுத்தல்

சிங்கப்பூரில் புதிய வகை கொரோனா பரவுவதால் அனைவரும் முகக்கவசம் அணிய அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் ஓங் யி குங் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த புதிய வகை கொரோனா தொற்றால் 25 ஆயிரத்து 900 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்த 2 முதல் 4 வாரங்களில் இத்தொற்று உச்சத்தை எட்டும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில், கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை தர தேவையான ஏற்பாடுகள் செய்யவும் மருத்துவமனைகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் உடல் நலம் பாதிக்கப்பட்டு பலவீனமாக உள்ளவர்களும் கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொள்ள அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் கொரோனா பரவலை தடுக்கும் வகையில் பொது மக்களுக்கு கட்டுப்பாடுகள் கொண்டு வரும் எண்ணம் தற்போது இல்லை என்றும், இந்த வகை கொரோனாவிற்கு K.P.1 மற்றும் K.P.2 என பெயரிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஓங் யி குங் மேலும் கூறினார்.






ஆப்கானிஸ்தான்

ஆப்கன் வெள்ளத்தில்

# 68 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் பருவமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 68 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த சில வாரங்களாக பருவமழை பெய்து வருகின்றது. தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் ஆங்காங்கே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வருகின்றது. கடந்த வாரம் பாக்லான் மாகாணத்தில் மழை வெள்ளத்தில் 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தது.

இந்நிலையில் கோர் மாகாணத்தில் மழை தீவிரமடைந்துள்ளது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் முதல் கட்ட அறிக்கையின்படி சுமார் 68 பேர் உயிரிழந்துள்ளதாக தலிபான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என்று அஞ்சப்படுகின்றது. மேலும் பத்துக்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளதாக அம்மாகாண ஆளுநரின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தைவான்

போர்க்களமாக மாறிய

# தைவான் பாராளுமன்றம்

தைவானில் புதிய விதிமுறைகளை கொண்டு வருவது தொடர்பாக பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, உறுப்பினர்கள் மத்தியில் கைகலப்பு ஏற்பட்டது.

தைவானில் புதிய ஜனாதிபதியாக லாய் சிங் தே விரைவில் பதவியேற்க உள்ளார். அவரது ஜனநாயக முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை பெறவில்லை என்றாலும் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்க உள்ளது.

அந்த கட்சியை விட அதிக இடங்கள் பெற்ற கேஎம்டி கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற விதிமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வர வலியுறுத்தினர். அதன்படி அவையில் பொய்யான கருத்துக்களை கூறுபவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கூறினர்.


இது தொடர்பாக அவையில் நடந்த விவாதம் வாக்குவாதமாக மாறியது. உறுப்பினர்கள் இடையே கைகலப்பு ஏற்பட, ஒருவர் சபாநாயகர் முன்பு இருந்த சட்ட மசோதாவை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினார்.



ராஜஸ்தான்

# 3 வயது குழந்தை பரிதாப மரணம்

காரில் குழந்தையை மறந்து விட்டு திருமண நிகழ்ச்சிக்கு பெற்றோர் சென்ற நிலையில், 3 வயது குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவம் ராஜஸ்தானில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



ராஜஸ்தானில் கோட்டவில் வசித்து வருகிறார் பிரதீப் நாகர். இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும், இரண்டு குழந்தைகள் உள்ளனர். சம்பவ தினத்தன்று பிரதீப் தனது மனைவி, மூத்த மகள் மற்றும் 3 வயதான இளைய மகள் கோர்விகா நாகர் ஆகியோரை காரில் அழைத்துக் கொண்டு திருமண நிகழ்ச்சி ஒன்றிக்கு சென்றுள்ளார்.

திருமண நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு வந்தவுடன் பிரதீப்பின் மனைவி மூத்த மகளுடன் காரில் இருந்து இறங்கியுள்ளார். ஆனால், 3 வயதான இளைய மகள் காரிலேயே இருந்துள்ளார்.

இதனை அறியாத பிரதீப், கோர்விகாவை அவரது மனைவி அழைத்து சென்று விட்டார் என்று எண்ணவே, காரை வாகன நிறுத்தத்தில் விட்டுவிட்டு, திருமண நிகழ்ச்சிக்கு சென்று சுமார் 2 மணி நேரம் உறவினர்விகளுடன் செலவழித்துள்ளனர்.

கோர்விகா தனது மனவியுடன் இருப்பார் என பிரதீப்பும், பிரதீப்புடன் இருப்பார் என அவரின் மனைவியும் நினைக்க குழந்தையை தேட முயற்சிக்கவில்லை.

பிறகு இருவரிடமும் இல்லை என அறிந்து கொள்ளவே, குழந்தையை தேட துவங்கியுள்ளனர். இதனையடுத்து, காரில் வந்து பார்த்தபோது காரின் கதவுகள் மூடப்பட்ட நிலையில், குழந்தை உள்ளே மயங்கிக் கிடந்துள்ளது.

இதனையடுத்து, அருகில் இருந்த மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்து சென்று, பரிசோதனை செய்ததில் ஏற்கெனவே, அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குழந்தையின் இறப்பு குறித்து எந்த புகாரும் அளிக்கப்படவில்லை எனவும், குழந்தையின் உடலை பிரேத பரிசோதனை செய்ய பெற்றோர்கள் மறுத்துவிட்டதாகவும் பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லி

டெல்லி முதலமைச்சர் தனிச்செயலாளரை

# காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி

ஆம் ஆத்மி கட்சி எம்.பி. ஸ்வாதி மலிவால் அளித்த புகார் அடிப்படையில் கைது செய்யப்பட்ட, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் தனிச் செயலாளர் பிபவ் குமாரை, ஐந்து நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க டெல்லி பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

ஆம் ஆத்மி கட்சி மாநிலங்களவை உறுப்பினரான ஸ்வாதி மலிவால், டெல்லி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்த புகாரில், பிபவ் குமார் தன்னை கெஜ்ரிவாலின் இல்லத்தில் கடந்த 13ஆம் திகதி தாக்கியதாக குற்றம்சாட்டியிருந்தார். இது தொடர்பாக பிபவ் குமாரை டெல்லி பொலிஸார் கைது செய்தனர். இதையடுத்து பிபவ் குமார் தாக்கல் செய்திருந்த முன் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் நேற்று முன்தினம் (18) இரவு பிபவ் குமார் டெல்லி மெட்ரோபோலிடன் மேஜிஸ்த்ரேட் கவுரவ் கோயல் முன் ஆஜர்படுத்தப்பட்டார்.

சென்னை

தமிழகத்திற்கு

# சிவப்பு எச்சரிக்கை



தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் அதிக கன மழை பெய்து வருவதால், சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் இடி, மின்னல் தாக்கியதன் காரணமாக ஒரு உயிரிழப்பு பதிவாகியுள்ள நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் 15 கால்நடை இறப்புகள் ஏற்பட்டுள்ளதோடு, 7 குடிசைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்:

# வெளியேற்றப்பட்டது சென்னை சுப்பர் கிங்ஸ்

## தகுதிகாண் போட்டிகளில் றோயல் சலஞ்சர்ஸ், பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கின் தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெற நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் தவறியுள்ளது.

பெங்களூருவில் சனிக்கிழமை (18) நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடனான போட்டியில் 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தகுதிகாண் போட்டிகளுக்கு சென்னை தகுதி பெறத் தவற, பெங்களூரு தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டி முடிவில் பெங்களூர், சென்னை, டெல்லி கப்பிட்டல்ஸ், லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் ஆகியன 14 போட்டிகளில் 14 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும், ஓட்ட விகித அடிப்படையில் புள்ளிகள் பட்டியலில் நான்காமிடத்தைப் பெற்றே தகுதிகாண் போட்டிகளுக்கு பெங்களூரு தகுதி பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னையின் அணித்தலைவர் ருத்துராஜ் கைகவாட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு, அணித்தலைவர் பப் டு பிளெஸியின் 54 (39), விராட் கோலியின் 47 (29), ரஜாட் பட்டிடாரின் 41 (23), கமரன் கிறீனின் ஆட்டமிழக்காத 38 (17), கிளென் மக்ஸ்வெல்லின் 16 (05), தினேஷ் கார்த்திக்கின் 14 (06) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் மிற்செல் சான்ட்னெர் 4-0-23-1, மகேஷ் தீக்ஷன 4-0-25-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 219 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்னை, தமது



இனிங்ஸின் முதலாவது பந்திலேயே கைகவாட்டை கிளென் மக்ஸ்வெல்லிடம் இழந்தது. பின்னர் மூன்றாவது ஓவரில் டரைல் மிற்செலை யஷ் தயாலிடம் பறிகொடுத்தது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த றஷின் றவீந்திர, அஜின்கியா றஹானே வேகமாக ஓட்டங்களைச் சேகரித்த நிலையில் றஹானே 33 (22) ஓட்டங்களுடன் பெர்கியூசனிடம் வீழ்ந்ததுடன், 61 (37) ஓட்டங்களுடன் றவீந்திர றண் அவுட்டானார். தொடர்ந்து அடுத்தடுத்த ஓவர்களில் தீக்ஷனவுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய ஷிவம் டுபே, சான்ட்னெர் ஆகியோர் கிறீன், மொஹமட் சிராஜ்ஜிடம் வீழ்ந்தனர்.

இறுதியில் இரவீந்திர ஜடேஜாவும், மகேந்திர சிங் டோணியும் போராடியபோதும் இறுதி ஓவரில் 25 (13) ஓட்டங்களுடன் டோணி தயாலிடம் விழ 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களையே பெற்ற சென்னை 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஜடேஜா ஆட்டமிழக்காமல் 44 (22) ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக டு பிளெஸி தெரிவானார்.



பாலத்தோப்பூர் கிங்ஸ் லெவிண் கழகத் தொடர்:

# சம்பியனான ஈஸ்ட் லங்கா

தீஷான் அஹமட்

பாலத்தோப்பூர் கிங்ஸ் லெவிண் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட இருபதுக்கு - 20 கடினபந்து கிரிக்கெட் தொடரில் ஈஸ்ட் லங்கா அணி சம்பியனானது.

சனிக்கிழமை (18) நடைபெற்ற இறுதிப் போட்டியில் புளூடைமன் அணியை வென்றே ஈஸ்ட் லங்கா சம்பியனானது.




இத்தாலிய சீரி ஏ தொடர்:

# டொரினோவிடம் தோற்ற ஏ.சி மிலன்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், டொரினோவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் தோற்றது.

இதேவேளை பியொரென்டினாவின் மைதானத்தில் சனிக்கிழமை (18) நடைபெற்ற அவ்வணிக்கும், நாப்போலிக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:

# ஹொ:ஃபென்ஹெய்மிடம் தோற்ற பயேர்ண் மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், ஹொஃபென்ஹெய்மின் மைதானத்தில் சனிக்கிழமை (18) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் பயேர்ண் மியூனிச் தோற்றது.

இதேவேளை ஐன்ரச்ட் பிராங்ஃபேர்ட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஆர்.பி லெய்ப்ஸிக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.






# மட்ரிட்டில் தொடரும் மோட்ரிச், க்றூஸ்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான லூகா மோட்ரிச் குறைந்த ஊதியமொன்றுக்கு இணங்கியமையடுத்து இன்னொரு பருவகாலத்துக்கு கழகத்தில் தொடருவதற்கு கொள்கையளவில் இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. மோட்ரிச்சின் சக மத்தியகளவீரரான டொனி க்றூஸுக்கும் இவ்வாறானதொரு ஒப்பந்தம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

38 வயதான மோட்ரிச்சின் மட்ரிட்டுடனான ஒப்பந்தமானது அடுத்த மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைய இருந்த நிலையில், நடப்புப் பருவகாலத்தில் கழகத்தை விட்டு வெளியேற அனுமதிப்பதாயே மட்ரிட்டின் ஆரம்பத் திட்டங்கள் காணப்பட்டிருந்தன.

மட்ரிட் குழாமில் அதிக ஊதியம் பெறுபவர்களாக மோட்ரிட், 34 வயதான க்றூஸும் கருதப்படுகின்றனர். நடப்புப் பருவகாலத்தில் மோட்ரிச் விளையாடியது குறைவென்றபோதும் அணிக்குள் நேர்மறையாக அவர் தாக்கம் செலுத்துகின்றார்.

வாய்ப்பு வழங்கப்பட்டார் மட்ரிட்டிலேயே க்றூஸ் தொடர்வார் எனக் கருதப்படுகிறது. மத்தியகளத்தில் பிரகாசித்த க்றூஸ், நடப்புப் பருவகாலத்தில் அதிக நேரம் விளையாடியவர்களில் குழாமில் ஆறாவதாகக் காணப்பட்டிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 20, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.